Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 23-5-1985 வியாழக்கிழமை (வைகாசி 10 றம்ழான் 2) முழக்கம் 107

## நிக்கவரெட்டிய சம்பவம்; 37 தமிழ் இளைஞர் ரிமான்டில்

(கொழும்பு)

"நிக்கவரெட்டிய பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டமை, மக்கள் வங்கி கிளை அலுவலகத்தில் கொள்ளையடிக்கப்பட்டமை சம்பந்தமாக பாதுகாப்புப் படையினர் முப்பத்து ஏழு தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். இவ்விளைஞர்கள் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டார்கள். இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இச் சந்தேக நபர்கள் கொழும்பில் இருந்தபோது கைது செய்யப்பட்டனர். மன்னம்பிட்டிக்கு அருகாமையில் நடைபெற்ற தாக்குதல் சம்பந்தமாக இருபத்துஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

★ மாஸ்கோவில் செய்தியாளர் மாநாட்டில் ராஜீவ் காந்தி அறிவிப்பு:

# தமிழர் பிரச்சினையை ராணுவம் தீர்க்கமுடியாது இலங்கை அரசு தீர்வுகாண முன்வரவேண்டும்!

(மாஸ்கோ)

இலங்கைத் தமிழர்கள் பல இன்னல்களை இன்று அனுபவித்து வருகின்றனர். இப் பிரச்சினைக்கு ராணுவத்தினால் தீர்வு காணமுடியாது. இலங்கை அரசு முன் வந்து இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டும்.

மாஸ்கோவில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை, பாகிஸ்தான், சீன நாடுகள் சம்பந்தமான பல கேள்விகளைப் பத்திரிகையாளர் இங்கு எழுப்பினர்

இலங்கைப்பிரச்சினை மிகவும் நுண்ணியதான ஒரு பிரச்சினை என்று வர்ணித்த திரு. ராஜீவ் காந்தி, இவ்விவகாரத்தில் இந்தியா வகித்து வரும் பணியினை சோவியத் யூனியன் பாராட்டியுள்ளது என்றும் சொன்னார்.

இலங்கையை சாட்டாக வைத்து இந்து சமுத்திரப் பகுதியில் யுத்த மேகங்கள் சூழ ஆரம்பித்துள்ளதெனக் குறிப்பிட்ட அவர், இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாதெனவும் வலியுறுத்திச் சொன்னார்.

# செட்டிக்குளம் 27000 தமிழரை 2 வாரத்தில் வெளியேற உத்தரவு

## ஜனாதிபதியிடம் தொண்டமான் கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள செட்டிக்குளம் பகுதியிலுள்ள சுமார் இருபத்தேழாயிரம் தமிழர்களையும் அங்கிருந்து இரண்டு வார காலத்தில் வெளியேறுமாறு பாதுகாப்புப்படையினர் உத்தரவிட்டிருப்பதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும், தமிழ் மக்களை அங்கருந்து அப்புறப்படுத்தக் கூடாதெனவும் அமைச்சர் எஸ். தொண்டமான், நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து அவசர வேண்டுகோள் விடுத்தார்.

செட்டிக்குளத்திலுள்ள சுமார் 5500 தமிழ்க்குடும்பங்களும் அங்கிருந்து வெளியேற இரு வார காலக்கெடு உதவி அரசாங்க அதிபருக்கு ஊடாக வழங்கப்பட்டதாகவும், அவர் வவுனியா அரசாங்க அதிபருக்கு இதனைத் தெரிவித்ததாகவும் அமைச்சர் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது

இவர்களில் அநேகமானவர்கள் அகதிகளாக வந்த இந்திய வம்சாவழியினராவர். படையினரின் இவ் உத்தரவைத் தொடர்ந்து கடந்த இருதினங்களாக இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

சுமார் இருபத்தேழாயிரம் பேரும் தமது விவசாயம், ஆடு, மாடு, கோழிப்பண்ணை

—4-ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடியில் மரணதண்டனை

[உடுப்பிட்டி]

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காக நெல்லியடி

- 4-ஆம் பக்கம் பார்க்க

குண்டு வெடிப்பினால்

## மட்டு. கல்வி கந்தோர் தரைமட்டமானது!

(மட்டுநகர்)

நேற்று அதிகாலை மர்மக் குண்டு வெடிப்பின் மூலம் மட்டுநகர் கல்வித் திணைக்களக் கட்டடம் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் திணைக்களத்தின் சகல கட்டடங்களும் தரைமட்டமானதாகத் தெரியவந்துள்ளது. குண்டுவெடிப்பினால் நகரின் அநேகமான கட்டடங்களும் அதிர்ந்ததாகவும், சுமார் பத்து மைல் தூரம் வரை

—4 ஆம் பக்கம் பார்க்க

## சத்வால்—எம். ஜி. ஆருடன் ஒரு மணி நேரம் பேசினார்

(சென்னை)

இலங்கையில் கடமையாற்றி கனடாவுக்குப் பாரதத் தூதுவராக இடமாற்றலாகிச் செல்லும் திரு. எஸ், ஜே. எஸ். சத்வால் செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்ததாகத் தெரி

— 4ம் பக்கம் பார்க்க

ஹெய்டன்கருத்து: மனிதஉயிர், உடைமைகள்

## அழிக்கப்படுவது ஆழ்ந்த கவலை தருகிறது!

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேகரித்து அனுப்புவதாக இலங்கை அரசு தெரிவித்த குற்றச்சாட்டுப் பற்றி அவுஸ்திரேலியா விசாரணை நடத்துமென இங்கு வந்துள்ள வெளிவிவகார அமைச்சர் திரு. ஹெய்டன் நேற்று செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அவுஸ்திரேலியா அக்கறை கொண்டுள்ளதாகவும் இங்கு தெரிவித்த அமைச்சர், அதற்காக உதவவும் தயாராகவிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இங்கு மனித உரிமைகள் பேணப்பட வேண்டியது அவசியமெனவும் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் அவர் சொன்னார்.

மனித உயிர்களும், உடைமைகளும் அழிக்கப்படுவதையிட்டு தமது ஆழ்ந்த கவலையையும் ஹெய்டன் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மூலம்

—4 ஆம் பக்கம் பார்க்க

## என்ன நடந்தது?

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட இங்

—4-ஆம் பக்கம் பார்க்க

14ம் திகதிக்குப்பின் கொழும்பு செல்லவில்லை:

## 232 பைகளில் நிரப்பிய கடிதங்கள் யாழ். தபாலகத்தில் தூங்குகின்றன!

இம்மாதம் 14ம் திகதி நடைபெற்ற அனுராதபுரம் தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர்வடபகுதிக்கான ரயில் சேவை நடைபெறாததால், கடந்த பத்துத் தினங்களாக இரு பகுதிக்குமான கடிதத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

வெளிமாவட்டங்களுக்கு முகவரியிடப்பட்ட லட்சக்கணக்கான கடிதங்கள் 232

— 4 ஆம் பக்கம் பார்க்க

மதத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி பேச்சு:

## இலங்கையின் வன்செயல் நடவடிக்கைகள் இனப் பிரச்சினையால் ஏற்பட்டவையல்ல!

இலங்கையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள வன்செயல்கள் இனப்பிரச்சினை என்ற அடிப்படையில் ஏற்பட்டவையல்ல என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று சர்வமதத் தலைவர்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

கோட்டை முனியப்பர்

## ஆலய விக்கிரகத்தை ஏற்றிச் சென்ற காரில் தீ பற்றியது

கோட்டை முனியப்பர் ஆலயத்திலுள்ள சிலவிக்கிரகங்களை ஆலய நிர்வாகி தமது காரில் ஏற்றிக் கொண்டு செல்லும் போது கார் தீப்பிடித்து எரிந்த சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இங்கிருந்த நான்கு நாயன்மார் விக்கிரகங்களையும் பாது

— 4 ஆம் பக்கம் பார்க்க

மாணவர் பிரதிநிதிகள் குழு கண்டனம்:

# அப்பாவி மாணவர்கள், மக்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்து வருகின்றது!

(சுண்டுக்குளி)

தமிழ்ப் பகுதிகளில் அப்பாவி மாணவர்கள், பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும், இம்சிக்கப்பட்டதையும் வன்மையாகக் கண்டித்து யாழ் மாணவர் பிரதிநிதிகள் குழு அறிக்கையொன்றை விடுத்துள்ளது. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"அண்மைக் காலத்தில் ஆயுதப் படைகளின் கட்டு மீறிய செயல்களினால் அநியாயமாக நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதில் எமது சக பாடசாலை மாணவர்கள் அறுவர் வல்வெட்டித்துறையில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு நூல் நிலையக் கட்டிடத்திற்குள் விட்டுக் குண்டு வைத்துத் தகர்த்த போது பல மாணவர்கள் உட்பட 25க்கு மேற்பட்டவர்கள் சின்னாபின்னமாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். மற்றும் மாணவர்கள் உட்பட 12பேர் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் பல பெண்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள். மேலும் பல பாடசாலை மாணவிகள் உட்படப் பல பெண்கள் மான பங்கப்படுத்தப் பட்டடார்கள்.

இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் இறுதிக் கிரிகைகள் கூடச் செய்ய முடியாத நிலையில் அம்மக்கள் உள்ளாக்கப்பட்டு இருந்தமையைக் குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்த சமயம் மற்றுமொரு படுகொலை கடலில் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒன்று மறியாத பெண் குழந்தை மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டது எதற்காக? இச்சம்பவங்கள் நாளை பாடசாலைகளிலும் ஏற்பட முடியாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனவே சகல மாணவர்களும், அதிபர், ஆசிரியர்கள், பொது மக்கள் அனைவரும் ஒன்று பட்டுக் குரல் கொடுப்பதின் மூலம் இதே போன்ற சம்பவம் பரவாது தடுக்க முடியும்; இச்சம்பவத்தை மனிதாபிமானம் கொண்ட அனைவரும் எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன் கண்டிக்க வேண்டியதும் அவசியம்.

## காரை. வடக்கு மின்சார அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட உப அலுவலகங்களினால் நிர்வகிக்கப்பட்டு வரும் மின்சாரத்திட்டங்களை முன்னேற்றுவதற்கு, யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் பல நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளார்.

அண்மையில் உப அலுவலகங்களின் மின்சார அத்தியட்சகர்களை அழைத்து அவர் நடாத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே இவ்வொதுக்கீடுகள் பற்றி அறிவிக்கப்பட்டது.

காரைநகர் வடக்கு உப அலுவலகத்தின் மின்சார அத்தியட்சகர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் சிபார்சின்படி சின்னாலடி என்னுமிடத்தில் 250 கே. வி. ஏ. அளவுள்ள உப மின் நிலையம் அமைக்க நான்கு இலட்சம் ரூபாவும், மணல்காடு என்னுமிடத்தில் தற்போது அமைந்துள்ள மின்மாற்றியை 250 கே. வி. ஏ அளவுள்ளதாக உயர்த்த நான்கு இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மின்சார வீதி விஸ்தரிப்பு வேலைகளுக்கும் இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு மக்களின் நன்றி

நெடுந்தீவு– குறிக்கட்டுவான் படகு தாக்கப்பட்ட சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் கரைக்குக் கொண்டுவரவும், அவர்களின் மரணச் சடங்கைச் செய்வதற்கும் எல்லாவிதத்திலும் உதவிய சகலருக்கும் நெடுந்தீவு மக்கள் நன்றியைத் தெரிவித்துள்ளார்கள்.

அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள், புங்குடுதீவு மக்களுக்கும், விசேஷமாக குறிக்கட்டுவான் கடை உரிமையாளர் திரு சு. திருநாவுக்கரசுவுக்கும், க. தனபாலச்சந்திரன், கூட்டுறவுச் சங்கத் தலைவர் கருணாகரன், டாக்டர் ஏ. பேரின்பநாயகம், முன்னாள் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோருடன் பல்வேறு விதமாகவும் உதவிய இளைஞர்களுக்கும் அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்கள்.

## உணவு முத்திரை வழங்கப்படும்

(கிளிநொச்சி)

கடந்த இனக்கலவரங்களின் போது அகதிகளாக இடம் பெயர்ந்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறி வசிக்கும் மக்களின் வறுமை நிலையை போக்கும் முயற்சியாக சகலருக்கும் உணவு முத்திரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கிராமம் கிராமமாகச் சென்று வறுமை நிலையில் வாடும் மக்களைப் பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு வருகிறது. அகதிகளுக்கு மட்டுமல்லாது வருமானம் குறைந்த சகலருக்கும் உணவு முத்திரைகள் வழங்குவது பற்றி அமைச்சினால் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.


## 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் எட்வர்ட் கிங்ஸ்லி கந்தையா
**(KANDOS)**
(கட்டிடப் பொறியியலாளர்)



தோற்றம்: 23-3-46 மறைவு: 24-4-85

எங்கள் நெஞ்சமெல்லாம் அணையாச் சுடராய்
ஒளி வீசிக் கொண்டிருக்கும் எங்கள் அன்புச் செல்வமே
புறப்படும் போதே நீ வீட்டை விட்டு
திரும்பி வர மாட்டாயென்று
எங்களுக்குத் தெரியவில்லையே
வருவதும் போவதும் வாழ்க்கையின் நாளேடு
என்றாலும் நீ இந்த இளமையில்
போவதில் எமக்கில்லை உடன்பாடு
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டனையே.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் 24-5-85 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல் தருபவர்; திருமதி புஷ்பம் பாலேந்திரா, (சகோதரி)
373, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

தாய், சகோதர சகோதரிகள் மைத்துன மைத்துனிகள், மருமக்கள்.





✲ துன்னாலை இளவாலையைச் சேர்ந்த குகன் சரோ தம்பதிகளின் புதல்வி சசிலா தனது முதலாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

✲ உடுவில் கிழக்கு தெய்வேந்திரம் இராஜநந்தினி தம்பதிகளின் மகள் சிந்துஜா இன்று தனது நாலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✲ கொக்குவில் மேற்கு சுபாஷ் சந்திரன் சாந்தினி தம்பதிகளின் மகன் சுபானந் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ பாஷையூர் தங்கராசா பவுண் தம்பதிகளின் மகள் சலுஜா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ ஞானிமடம் தங்கராசா பரமேஸ்வரி தம்பதிகளின் மகன் ராஜ்காந் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ கிளிநொச்சி திருநகர் சிவகுமார் சுமதி தம்பதிகளின் மகன் துஷாந் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ மாதகல் மேற்கு குமரகுரு அமிர்தராணி தம்பதிகளின் மகன் அருள்குமார் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ அரியாலை சுப்பிரமணியம் புலோறன்ஸ் தம்பதிகளின் மகன் நளினிதன் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ உரும்பராய் கிழக்கு பேரின்பநாதன் ஆன் ரோசாறி தம்பதிகளின் மகள் ஜசோபா நிஷானி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ அளவெட்டி வடக்கு ஜோதிராஜா பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் கவியரசி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## முதலுதவி பயிற்சி

(அளவெட்டி)

அளவெட்டி தெற்கு மக்கள் சுகாதாரக் குழுக் கூட்டம் அளவெட்டி பிரசவ விடுதிக் காரியாலயத்தில் தலைவர், இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

இப்பகுதியிலே படித்து, வேலைவாய்ப்பில்லாத இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சிகள் காங்கேசன்துறை, மல்லாகம் வைத்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்டன.

அளவெட்டி தெற்கு மக்கள் சுகாதாரக் குழுவினர், பயிற்றப்பட்ட இளைஞர் யுவதிகள் நன்மை அடையச் செய்யும் வகையில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை அக்கூட்டத்தில் வைத்திய சுகாதார அதிகாரி திரு. சிங்கராயரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## பஸ்ஸில் கைது

(மிருசுவில்)

வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆனையிறவிலிருந்து பளை வரை பிரயாணிகளுடன் பஸ்ஸில் பயணம் செய்தவர்கள், பளையில் வைத்து இரு இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றனர்.

## உற்சவ முடிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித சவேரியார் தேவாலய நவ நாள் உற்சவம் 20ம் திகதி நிகழ்ந்த திருப்பலி பூசையுடன், திருச்சொரூப சுற்றுலாவுடனும் பூர்த்தியடைந்தது. பெருந்திரளானோர் இவ்வுற்சவத்தில் கலந்து கொண்டனர்.

## மின்சாரம் தாக்கி மரணம்

(சரசாலை)

சரசாலை கூபதபால் கந்தோர் அதிபர் கு. மகாதேவா மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி மரணமானார். நுங்கு எடுக்கச் சென்ற சமயம், சட்டவிரோத மின்சாரம் பாவிப்பவர்களின் சீரற்ற மின்இணைப்புக் கம்பி அறுந்து ஏற்பட்ட மின் ஒழுக்கு இவர் மீது பாய்ந்தமையால் இம் மரணம் சம்பவித்தது.


## வரி விளம்பரம்

பயிற்சி

ரெலிவிசன், வீடியோ டெக்றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், Hotel Management, French, Computer Programming வகுப்புக்கள் உடன் ஆரம்பமாகின்றன. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

எனது அன்பார்ந்த வாடிக்கையாளர்க்கு

அருணாசலம் சண்முகம் மகாதேவா ஆகிய நான் எனது 65, பெரிய தெரு, என்ற விலாசத்திலுள்ள அடைவு கடையை '85ம் ஆண்டு ஆனி 30ஆம் திகதியுடன் மூடி விடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். ஆனபடியால் தயவு செய்து உங்கள் சிரமங்களைப் பாராது ஆனி மாதம் 25ம் திகதிக்கு முன்னராக உங்கள் அடைவு நகைகளை மீட்டு எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தனித்தனியே அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

அ.ச. மகாதேவா

## வாடகைக்கு வீடு தேவை

பிரசித்தி பெற்ற நிறுவனமொன்றின் பாவனைக்கு சுண்டுக்குளி அல்லது அதனைச் சார்ந்த பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை. உடனே தொடர்பு கொள்க.

விளம்பரதாரர் M 11
மே/பா Dyn Ads,
43 பரங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

### உதய சிந்தனே

"நம் குழந்தைகள், தங்களது வாழ்வையும் ஆசைகளையும் துறந்து, சுயநலத்தைப்பற்றிய எண்ணம் சிறிது கூட இல்லாமல், பாடுபட்டுச் சாகும்போது, நான், ஒரு தாய் சும்மா இருக்க முடியுமா?

-- தாயில் மாக்ஸீம் கார்க்கி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

23 5–1985 வியாழக்கிழமை (குரோதன வைகாசி 10)

# அஸ்கிரிய அறிவுரையை அத்துலத் முதலி ஏற்பாரா?

"தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்" என்ற கோஷம் மீண்டும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து எழும்பத் தொடங்கியுள்ளது.

வெளிநாட்டுப் பிரமுகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யும் காலங்களில், அவர்கள் பார்வைக்காக என்ற தோரணையில் இவ்வாறான நீதியான பேச்சுக்களை அரச தரப்பு உயர் மட்டத்தினர் நிகழ்த்துவது வழக்கமான சங்கதி.

இந்தப் பழக்கப்பட்டுப்போன சமாச்சாரம், அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஹெய்டன் தற்போது இங்கு வந்திருக்கும் நேரத்திலும் நடத்தப்பட்டிருப்பது எமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை.

சாதாரண நாட்களில், "இங்கு இனப் பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு. இதற்கு இராணுவத் தீர்வைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறுவார்கள்.

வெளிநாட்டுப் பிரமுகர்கள் இங்கு வருகை தரும் காலங்களில் "இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே விரும்புகின்றோம். ஆனால் கூட்டணியினரோ, தீவிரவாத இயக்கத்தினரோ இதனை விரும்புகின்றார்கள் இல்லை" என்று நீலிக் கண்ணீர் வடிப்பார்கள்.

ஆனால் நடைமுறையில் தாராள ஆயுத பாவனையும், இனப் படுகொலையும், அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்ற நாமகரணம் சூட்டலும் இங்கு சர்வ சாதாரணமாகிவிட்டது.

ஆங்காங்கே தீவிரவாத இயக்கங்கள் பொறுமையிழந்த நிலையில் நடத்தும் தாக்குதல்களுக்கு, சாதாரண மக்களும், இளம் மாணவர்களுமே படையினரால் பதம் பார்க்கப்படுகின்றனர்.

இது போதாதென்று, இந்நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சர் அத்துலத் முதலி நேற்று முன்தினம் அறிவித்த எட்டு அம்சத் திட்டம் எந்தப் புதிய அம்சத்தையும் உள்ளடக்கியதாகத் தெரியவில்லை.

தேசியக் கொடி, தேசிய கீதம், பௌத்த மதம், ஒரே ஆட்சி, அனைவரும் ஏற்கும் தீர்வு என்று பழைய கள்ளையே புதிய சிரட்டையில் வார்க்க முனைவதாக எமக்குத் தெரிகின்றது.

அதேவேளையில் புதிய போர்ப் பிரகடனமொன்றையும் செய்துள்ளார்.

தமது எட்டு அம்சத் திட்ட அடிப்படையிலான அரசியல் தீர்வை தீவிரவாத இயக்கங்கள் ஏற்கும்வரை அவர்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை தொடருமென எச்சரித்துள்ளார்.

அவர்களின் முகாம்களை நிர்மூலமாக்குவதையும், தீவிரவாதிகளைப் பலவீனப்படுத்துவதையும் அரச படைகள் தொடர்ந்து செய்யுமென்றும் ஆயுதப் படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயிற்சித் திட்டங்களை விஸ்தரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும் பறைசாற்றியுள்ளார்.

இத்தனையையும் அறிவித்துள்ள அமைச்சர், அரசாங்கம் விரும்பும் அரசியல் தீர்வு என்ன என்பதை மூடு மந்திரமாக ஏன் வைத்திருக்க வேண்டும்?

அதனையும் ஏன் பகிரங்கப்படுத்தக் கூடாது? பொது மக்களுக்கு அறியத் தந்தால்தானே, இளைஞர் இயக்கங்கள் அவற்றைப் பரிசீலனை செய்ய முடியும்!

ஒரு கரத்தில் கொடுவாக் கத்தியையும், மறு கரத்தில் சாப்பாட்டுப் பார்சலையும் வைத்துக்கொண்டு பசியால் வாடுபவனுக்கு உணவைத் திணிக்க முடியுமா?

'இந்தியாவையும், தமிழ் நாட்டையும் பேச்சு வார்த்தைக்கு அழையுங்கள்; தீவிரவாத இயக்கத் தலைவர்களுடன் கூடி ஆலோசித்து ஒரு நல்ல தீர்வைக் காணுங்கள்' என்று அஸ்கிரிய பீடாதிபதி அரசாங்கத்திற்கு விடுத்திருக்கும் அழைப்பை அமைச்சர் அத்துலத்முதலி நன்கு பரிசிலனை செய்யவேண்டும்.

அஸ்கிரிய பீடத்திற்கும், அரசாங்க உயர்மட்டத்திற்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக நின்று செயற்பட்டால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

அஸ்கிரிய பீடத்தின் காலமறிந்த புத்திமதியை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அவர்கள் காதில் அது விழுமா?

### ★ ராஜீவ்-கொர்பசெவ் சரித்திர முக்கியத்துவ சந்திப்பு

# பரஸ்பர மதிப்பு சமத்துவம் உள்ள உறவென பெருமிதம்!

(மாஸ்கோ)

உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடுகளில் ஒன்றாக விளங்கி, தனது தனித்துவத்தையும், மகத்துவத்தையும் உலகளாவிய வகையில் நிலைநிறுத்திவரும் பாரதத்திருநாட்டின் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியும், வல்லரசு நாடுகளில் ஒன்றாக வலிமை மிகப்பெற்று பொதுவுடைமைத் தத்துவத்தின் செயற்பாட்டுக்கு முழுவடிவம் கொடுத்து வரும் சோவியத் யூனியனின் ஜனாதிபதி திரு. மைக்கெல் கொர்பசெவ்வும் சரித்திர முக்கியத்துவம் மிக்கத் தமது உத்தியோகபூர்வப் பேச்சு வார்த்தைகளை மாஸ்கோவில் செவ்வாய்க்கிழமையன்று நடத்தினர். பாரத எல்லைக்கப்பாலும், இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்திலும் பெருக்கமடைந்து வரும் இராணுவ நடமாட்டம் குறித்துப் பாரதப் பிரதம மந்திரி அவ்வேளை தனது கவலையை வெளியிட்டார். பாரதத்துடனான சோவியத் யூனியனின் நட்புறவு சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது என்று ஜனாதிபதி திரு கொர்பசெவ் அத்தருணம் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினார்.

முன்னதாகப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி மாஸ்கோ சென்றடைந்தபோது விமான நிலையத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதம மந்திரி திரு. டிகினோவ், வெளியுறவு அமைச்சர் திரு குரோமிக்கோ, பாதுகாப்பு அமைச்சர் திரு சொக்கலா முதலானோர் அவரை விமான நிலையத்தில் வாத்ஸல்யத்துடன் வரவேற்றனர்.

பின்னர் திரு காந்திக்கும், திரு. கொர்பசெவ்வுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. மூன்று மணித்தியாலங்கள் வரை நடைபெற்ற இச்சந்திப்பின்போது இரு தரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச நிலைமை குறித்து விரிவான வகையில் ஆராயப்பட்டன.

"பாரத எல்லைக்கப்பாலும், இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்திலும் அதிகரித்து வரும் இராணுவ நடமாட்டம் குறித்து தனது கவலையை வெளியிட்ட திரு காந்தி தெற்காசியப் பிராந்தியத்தில் ஒத்துழைப்புக்கு சுமுகமானதும், சிறப்பானதுமான பாரத செயற்பாட்டு விருப்பத்தைத் தெளிவுற வற்புறுத்தினார்.

அண்டை நாடுகளுடன் தனது நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள பாரதம் கொண்டுள்ள விருப்பத்தையும் அவர் தெரிவித்தார். அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன் முயற்சிகளையும் அவர் விபரித்தார். பாலஸ்தீனியர்களின் சட்ட பூர்வ உரிமைகள் மறுக்கப்படுவது, தென்னாபிரிக்காவில் இடம்பெறும் இனஒதுக்கல், நமீபியாவில் நிகழும் உரிமைமீறல், தென்மேற்கு, தென்கிழக்கு நாடுகள் நிலைமை என்பன குறித்துத் தமது நாட்டின் நிலைப்பாட்டை அவர் தெளிவுபடுத்தினார். எந்த ரூபத்திலான வெளியார் குறுக்கீட்டைப் பாரதம் ஏற்கத் தயாராக இல்லை என்றும் சொன்னார் அவர். படைக்குறைப்பு, மற்றும் அணு ஆயுத ஒழிப்பு விடயங்களில் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகள் ஆக்கபூர்வமானவை என்று அவர் அதற்கு வரவேற்புத் தெரிவித்தார்.

சோவியத் யூனியனுடனான முப்பது வருடகால நட்புறவு தனிச்சிறப்பு மிக்கது என்று பூரிப்புடன் சொன்னார். சோவியத்துடனான நட்புறவு பாரதத்தின் வெளியுறவுக் கொள்கையின் ஓர் அம்சம் என்றார் அவர். இடுக்கண் ஏற்பட்ட காலத்தில் உதவியளித்த நல்ல நண்பர்கள் என்று சோவியத் மக்களைப் பாரத மக்கள் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1971ம் வருடம் இரு நாடுகளுக்கும் இடையில் உருவான நட்புறவு உடன்படிக்கையை நினைவு கூர்ந்த திரு. காந்தி மகாத்மா காந்தி, நேருஜீ, திருமதி இந்திரா காந்தி வழியில் பாரதம் தனது சீரியச் செயற்பாட்டைத் தொடர்ந்தும் செய்யும் என உறுதியளித்தார். அணிசேரா நாடுகளின் தலைமைத்துவத்தை ஏற்றுப் பாரதம் ஆற்றி வரும் பணியின் பாங்கினையும் அவர் பகர்ந்தார்.

சோவியத் ஜனாதிபதி தனது உரையில், 'பாரதத்துடனான உறவு சமத்துவம், பரஸ்பர மரியாதையை அடிப்படையாகக் கொண்டது. அது நிப்பந்த ரீதியில் இல்லாத ஒன்றாகும். சர்வதேச உறவு வலுப்பாட்டிற்காக இருநாடுகளும் ஆற்றிவரும் முக்கியமான பங்களிப்பை எவரும் மறுக்க முடியாது." என்று சொன்னார்.

சோவியத் யூனியன் ஜனாதிபதி, திரு. காந்திக்கு அரச விருந்துபசாரம் அளித்து கௌரவித்தார்.

### திருச்சி சம்பவம்: நீதி விசாரணைக்கு

## சர்வகட்சிக் குழு ஆளுநரிடம் மகஜர் மூலம் கோரிக்கை

(சென்னை)

திருச்சி மத்திய சிறைச்சாலையில் தி மு க தொண்டர்களுக்கும் ஏனைய கைதிகளுக்கும் இடையிலான மோதல் குறித்து உயர்மட்ட ரீதியிலான நீதி விசாரணை நடத்திச் சம்பவத்திற்குக் காரணமானவர்களைத் தக்கவிதத்தில் கண்டிக்கவேண்டும் என்று திமுக தலைமையிலான சர்வகட்சிக் குழு ஒன்று ஆளுநர் திரு எஸ் எல். குரானாவிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது.

இச்சம்பவத்தில் நாற்பது பேர் காயமடைந்தனர் என்பதும் கூடாரம் ஒன்று எரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

## பாகிஸ்தானில் மேலும் ஏழு புதிய அமைச்சர் நியமனம்

(கராச்சி)

பாகிஸ்தானில் மேலும் ஆறு அமைச்சர்களும் ஓர் புதிய இணையமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

மேலும் சில அமைச்சர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

### ஒரே சூலில் 4 சிசுக்கள்

(சென்னை)

தமிழகத்தில் யசோதா என்ற பெண் ஒரே பிரசவத்தில் நான்கு பிள்ளைகளைப் பெற்றுள்ளார். தாயும் சேய்களும் நலமுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 476 தி. மு .க. தொண்டர் விடுதலை

(தஞ்சாவூர்)

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசு போதிய அக்கறை காட்டவில்லை எனக் கூறி தஞ்சாவூர் மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் செய்ய முற்பட்ட போது கைதான முந்நூற்று முப்பத்து எட்டு தி மு க. தொண்டர்களையும் விடுதலை செய்யுமாறு மாஜிஸ்திரேட் உத்தர விட்டுள்ளார். பத்து நாள் சாதாரணக் காவலில் இருந்து அவர்கள் ஏற்கனவே தண்டனை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையிலும் தி. மு. க. முக்கியஸ்தர் திரு. பி பொன்னுரங்கம் உட்பட நூற்று முப்பத்து எட்டு தி மு க. தொண்டர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

### என். டி. ராமராவ் ரூபா 1 லட்சம் நன்கொடை

(ஹைதராபாத்)

புதுடில்லியிலும் மற்றும் இல பகுதிகளிலும் உண்டான வெடிகுண்டு விபத்துச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு ஆந்திர முதலமைச்சர் திரு என, டி. ராமராவ் ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தனது அரசு பூரண ஒத்துழைப்பு அளிக்கும் என அவர் மத்திய அரசுக்கு உறுதியளித்துள்ளார்.

### சட்ட மந்திரி உறுதி

(புதுடில்லி)

"பயங்கரவாதம், சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு எதிரான புதிய சட்டம் சீக்கியர் சமூகத்தினர்க்கு எதிரானது என லோகசபையில் சிலஉறுப்பினர்கள் எழுப்பிய அச்சம் அர்த்தமற்றது நாடளாவிய வகையில் புதிய சட்டம் செயற்படுத்தப் படவுள்ளது." என்று சட்ட அமைச்சர் திரு. அசோக்சென் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

ஈழமுரசு

## கீழ்க்காணும் இலக்க விண்ணப்பதாரிகள் காலே 9 மணிக்கு சமுகமளிக்கவேண்டும்

## அனுராதபுரத்தில் பாதிப்புற்ற ஊழியர் விபரம் கோரப்படுகிறது

அனுராதபுரத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களின் பின் தென் இலங்கையில் பணியாற்றிய தமிழ் ஊழியர்கள் பலர் படுகொலை செய்யப் பட்டும், மிருகத்தனமாகத் தாக்கப்பட்டும் பாதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவங்களினுல் அப்பகுதிகளில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் பாது காப்பின்மை காரணமாக வேலைக்குச் செல்ல முடியாத நிலையிலும், பல ஊழியர்கள் எங்கிருக்கின்றூர்கள் அவர்களது விபரங்களைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவ்வூழியரின் குடும்பத்தினர் கவலை அடைந் துள்ளனர். ஆகவே இச்சம்பவங்களினுல் வேலைக்கு செல்லமுடியாது இருப் பவர்களும் ஏற்கனவே வேலைக்குச் சென்று அவர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியாது இருப்பவர்களும் அரச, கூட்டுத்தாபன, தனி யார்துறை தமிழ் ஊழியர்கள் அனைவரினதும் விபரங்களை யாழ்ப்பா ணம் ஸ்ரான்லி வீதி, 95/1 இலக்கத்திலுள்ள பாதிக்கப்பட்ட ஊழியர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு அதன் செயலாளர் திரு. ஐ. தி. சம் பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# குருநகர் மாடிமனை பெற தெரிவு முடிவுற்றது; லொத்தர் மூலம் இன்று வீடுகள் வழங்கப்படும்!

குருநகர் ரணுவ முகாமாக இயங்கி வந்த மாடி மனை வீடுகளை அந்தப் பகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நேர்முகப் பரீட்சை நேற்று முடிவடைந்தது; இங்குள்ள 160 வீடுகளுக்கும் குடியிருப் பாளர்கள் தெரிவு நேற்று மாலையே பூர்த்தி செய்யப்பட்டது.

பெரிய குடும்பங்களைக் கொண்ட விண்ணப்பதாரி களுக்கு முக்கியத்துவம் அளிக் கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவி ருத்தி அதிகார சபை யாழ் மாவட்ட பொது முகாமையா ளர் திரு. த. பூ. முருகையா, யாழ் மாநகர ஆணையாளர் திரு. வீ. சி கே. சிவஞானம், யாழ். உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவை நடத்தியது.

கீழ் குறிப்பிட்ட இலக்கங் களைக் கொண்ட விண்ணப்ப தாரிகள் இன்று 23ம் திகதி வியாழக்கிழமை காலை வீட மைப்பு அதிகார சபை அலுவ லகத்துக்கு தவருது சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள் ளனர்.

இவர்கள் தமது அடையாள அட்டையுடன் வரவேண்டு மென்றும், இவர்கள் முன்னிலை யில் இவர்களுக்கான வீடுகள் லொத்தர் மூலம் தெரிவு செய் யப்படுமென்றும் பொது முகா மையாளர் திரு. த. பூ. முரு கையா அறிவித்துள்ளார்.

01, 04, 05, 08, 10, 11, 12, 13, 21, 22, 23, 36, 38, 39, 41, 49, 52, 55, 56, 59, 64, 66, 67, 69, 70, 71, 80, 81, 85, 87, 92, 95, 100, 105, 113, 115, 129, 135, 138, 141, 146, 153, 163, 170, 171, 172, 185, 187, 188, 200, 209, 214, 215, 219, 222, 224, 226, 234, 235, 237, 252, 258, 262, 265, 267, 268, 271, 274, 281, 282, 287, 293, 300, 330, 333, 339, 343, 347, 356, 360, 361, 366, 376, 391, 414, 416, 419, 421, 426, 428, 429, 435, 440, 443, 446, 450, 456, 463, 478, 483, 487, 488, 494, 497, 504, 506, 516, 530, 532, 537, 542, 548, 602, 615, 619, 634, 645, 646, 678, 684, 686, 699, 700, 703, 704, 707, 729, 748, 754, 782, 785, 789, 802, 803, 808, 811, 813, 816, 820, எல்-3, எல்-8, எல்-9.

## என்ன நடந்தது...

– 1ஆம் பக்கத் தொடர்

குள்ள வர்த்தகர் ஒருவரின் லொறியும், அதில் வந்தவர்க ளும் இன்னமும் வந்து சேர வில்லை என்று புகார் செய்யப் பட்டுள்ளது. ஹெரவப்பொதி தானையில் வைத்து லொறியு டன் இவர்கள் காணுமல்போய் விட்டனராம்.

## ஹெய்டன் கருத்து...

தீர்வு காணக்கூடிய பிரச்சி னையை இழுத்துச் செல்வதால் இலங்கைக்கே பல்வேறு கஷ் டங்களும் ஏற்படுமெனவும் அவர் சுட்டிக் காட்டினுர்.

நேற்றுக் காலை பிரதம மந் திரியைச் சந்தித்த போதும், பல நிமிடங்கள் இனப் பிரச் சினை பற்றியே அமைச்சர் ஹெய்டன் பேசினுர்.

## 232 பைகளில்...

தபால் பைகளில் நிரப்பப் பட்டு காட்சிப் பொருளாக யாழ் தபாலகத்தில் வைக்கப் பட்டுள்ளன.

பதிவுத்தபால்கள், மணி ஓடர் கடிதங்கள் ஆகியன வும் இதே நிலையில் பைகளில் தூங்கிக்கொண்டிருப்பதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிமாவட்டக் கடிதங் கள் கடந்த 13ம் திகதியே கடைசியாக யாழ்ப்பாணம் வந்தன. அன்றைய தினத் துக்குப் பின்னர் இங்கிருக்கும் கடிதங்கள் வெளியே செல்ல வில்லை.

## 1500 பேர் கைது

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை யில் மத்திய அரசின் போக்கை கண்டித்து மறியல் செய்ய முயன்ற சுமார் ஆயிரத்தி ஐநூறு தி.மு.க. தொண்டர் கள் நேற்றுக் கைதுசெய்யப் பட்டார்கள்.

இவர்களில் 1300 பேர் திரு நெல்வேலியிலும் 191 பேர் கன்னியாகுமரியிலும் கைதா னதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

## மட்டு. கல்வி...

1–ஆம் பக்கத் தொடர்

குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள இடிபாட் டுக்குள்ளிருந்து எதனையும் எடுக்க முடியவில்லையென புகார் செய்யப்பட்டது. பாது காப்புப் படையினர் இந்தக் கட்டடத்தில் விரைவில் குடி யேற இருந்ததாகவும் கூறப் படுகின்றது.

மட்டுநகரில் அண்மையில் நடைபெற்ற மிகப்பெரிய குண் டுத் தாக்குதல் இதுவாகும்.

## சத்வால்...

விக்கப்பட்டது.

இலங்கையின் தற்போதைய நிலை, தமிழருறும்இன்னல்தொ டர்பான பல விடயங்கள் குறி த்து இச்சந்திப்பின் போது வ்வாதிக்கப்பட்டதாகத்தெரிய வருகிறது.

## அச்சுவேலியில் உண்ணுவிரதம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ் நிலையத்தில் பொதுமக்களும், அச்சுவேலி தனியார் பஸ் ஊழியர்களும் நேற்று உண்ணுவிரதம் அனுஷ் டித்தனர். கடைகளும் மூடப் பட்டிருந்தன. கோப்பாய் பகுதி தனியார் பஸ் சொந்தக்காரர் களுக்கும் அச்சுவேலிப் பகுதி தனியார் பஸ் சொந்தக்காரர் களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தீர்ப்பதில் தலை யிட்ட தீவிரவாத இளைஞர் அணியொன்று பக்கம் சார்ந்து அச்சுவேலிப் பகுதி தனியார் பஸ் சொந்தக்காரருக்கு அநீதி இழைத்ததாகக் கூறி அச்சுவேலிப் பகுதியில் உண்ணு விரதம் மேற்கொள்ளப்பட்ட தாக அறியப்படுகிறது.

## செட்டிக்குளம்...

களையும்கூட இதனல் இழக்கும் நிலை உருவாகியுள்ளது.

தமது ஆட்சேபனையைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசிய பின் னர் நிலைமையை தமக்கு அறி யத்தருவதாக ஜனுதிபதி கூறி யதாக அமைச்சர் தொண்ட மான் நேற்றிரவு ஈழமுரசுக் குத் தெரிவித்தார்.

பிந்திய செய்தி: தமிழரை இங்கிருந்து வெளியேறு எவ ரும் பணிக்கவில்லை என பாது

## நெல்லியடியில்...

மகாத்மா தியேட்டருக்கு அரு கில் நேற்று ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. வந்தாவயைச் சேர்ந்த மூதி யான்சே பியசேன என்பவரே மரணதண்டனை பெற்றவரா வர். இவரது சடலம் மின்கம்ப மொன்றில் கட்டப்பட்டிருந் தது. 35 பேரைக் காட்டிக் கொடுத்தமைக்காகவும், 15 கற் பழிப்புச் செயல்களில் ஈடுபட் டமைக்காகவுமே இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட தாகவும், ரெலோஇயக்கமேமர ண தண்டனையை வழங்கியதா கவும்தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஆலய விக்கிரகத்தை...

காப்புக் காரணமாக ஏற்றிக் கொண்டு சென்றபோதே மெயின் வீதி கொன்வன்ற் சந்தியில் காரி தீப்பிடித்து எரிந் தது. ஆனுலும் விக்கிரகங்கள் காப்பாற்றப்பட்டன.

கடந்த பத்தாம் திகதிக்குப் பின்னர்இவ்வாலயத்தில் பூஜை கள் நடைபெறவில்லை, விளக்கு மட்டும் ஏற்றப்பட்டுவருகிறது. மற்றைய விக்கிரகங்கள் பீடங் களில் நிரந்தரமாக வைக்கப் பட்டுள்ளன. நான்கு நாயன் மார் விக்கிரகங்களும் பாது காப்பின்றி இருந்ததால் அவற் றை எடுத்துச் சென்றதாக நிர் வாகி தெரிவித்தார்.

காபபு அமைச்சை மேற்கோள் காட்டி இலங்கை வானெலி நேற்றிரவு அறிவித்தது.

## இன்று காலை இரதோற்சவம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் இரதோற் சவம் இன்று காலை பத்து மணி க்கு நடைபெறவுள்ளது.

## இலங்கையின் வன்...

அமைச்சரவைச் செயலக மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சந்திப்பில் ஜனுதிபதி ஜெயவர்த்தன இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் பயங்கர வாதச் சம்பவங்கள் சர்வதேச மாக்ஸிஸவாதத் திட்டத்தின் ஒரு பகுதியே என எடுத்துக் கூறினுர்.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்கள் கலந்துகொண்ட இச்சந்திப் பில் ஜனுதிபதி தொடர்ந்து பேசுகையில் இந்நாட்டில் நெருக்கடிகள் ஏற்பட்டமைக்கு பல காரணங்கள் உண்டு என வும், அவற்றை அரசியல், சம யம், இராணுவம் என்று பிரிக் கலாம் எனவும் கூறினுர்.

இராணுவத்திற்குப் பொறுப் பாக உள்ள அதிகாரிகளுடன் தான் இராணுவ நிலைமைகள் பற்றித் தொடர்ந்து பேசி வருவதாகவும், அதேபோல நாட்டின் அமைதியின்மை போன்ற பல்வேறு பிரச்சினை கள் பற்றி மற்றைய மதத் தலைவர்களின் கருத்துக்களை அறிய விரும்புவதாகவும் தெரி வித்தார்.

சமீபத்தில் அனுராதபுரத் தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் பற்றி அஸ்கிரிய பீடாதிபதி டலிப்பான சந்தா னந்த தேரோ இங்கு எடுத் துக் கூறினுர்.

நேற்றைய இச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலத் திற்கு நீடித்ததாகவும், தொட ர்ந்தும் இவ்வாறான சந்திப்புக் கள் இடம்பெறும் எனவும் ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றைய அமைச்சரவை கூட்ட முடிவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்துமதத் தலைவர்கள் சார் பில் கப்பித்தாவத்தை ஆலயத் தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தினக் குருக்கள் கலந்துகொண்டார்.

## மரண அறிவித்தல்

திரு: யோண் அந்தோனிப்பிள்ளை காலமாகி விட் டார், இவர் காலம்சென்ற யோண்பிள்ளை சிசிலியா ஆகி யோரின் அன்புமகனும் ஞானம்மா ஏரோணி ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியோகுபிள்ளை ஆபேல் விக்ரோறி பாஞானப்பிரகாசம் ஆகியோரின் மரு மகனும் A.S. அருளானந்தம் ஆசிரியர் J: P. பேரின்பம் ஆகியோரின் மைத்துனரும் மேரிப்பிள்ளையின் அன்புக் கணவரும் அக்கினஸ் ஜெசலின் பற்றிமா அருள்பெற்றி னிலா விக்ரோறி (ஓமான்) சில்வஸ்ரர் யூட் ஆகியோரின் அன்புத் தந்தையும் J. C, இம்மனுவல் (இ. மி. சபை) ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மாமனும், நிலாணி, நிசாந்தி, மேரி டயாணு அனிபெஸ்ரன் அருண் பிரசாத் ஆகியோரின் பேரனுமாவார், அன்னரின் பூதவு டல் அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 23 5.85 வியாழக்கிழமை நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றூர் உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.


தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



சவூதி அரேபியா

போன்ற

மத்திய கிழக்கு நாட்டு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோருக்கான பிரயாண ஒழுங்கு களுக்கும், பாஸ்போர்ட், பொன்ட் (BOND) வசதிகள் முதலியவற்றுக்கும்

உடன் தொடர்பு கொள்க:

S. K. மகேந்திரன் (சட்டத்தரணி)

24, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24031


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 23-5-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.